அரசியல் மாமேதை முரசொலிமாறன் பிறந்தநாள் இன்று

இந்தியாவில் மாநில சுயாட்சி அடைய உறுதியேற்போம்!

பாசமும் அன்பும் பண்புமும் நிறைந்த எம்.பி. அண்ணன் முரசொலிமாறன் அவர்களின் பிறந்த நாள் இன்று. தலைவர் கலைஞரின் மனசாட்சி மட்டுமல்ல; மாநில சுயாட்சியின் வழிகாட்டியுமாவார். இந்திய அரசியல் சட்டத்தில் ஒன்றிய அரசு தன்னிடம் குவிந்திருக்கும் அதிகாரங்களை மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். அதற்கான நியாயங்களை விளக்கி 'மாநில சுயாட்சி' என்ற பெயரிலேயே ஆராய்ச்சி நூலினை எழுதினார்.

அந்த நூலில் மாநிலங்களுக்கு அதிகாரங்களை மேலும் வழங்குவது இந்தியாவை பலப்படுத்தவே; பலவீனப்படுத்த அல்ல என்பதை ஆதாரங்களோடு விளக்கினார். மாநில சுயாட்சி அறிஞர் அண்ணாவால் பேணி வளர்த்துப் பெற்றுக்கொள்ள விட்டுச் செல்லப்பட்ட 'இலட்சியச் சொத்தாகும்' என்று வலியுறுத்தினார். தலைவர் கலைஞர், நாவலர், பேராசிரியர் மூவரும் எம்.பி. அண்ணன் அவர்களைப் பாராட்டி அணிந்துரை வழங்கினர்.

இன்று இந்தியா முழுவதும் மாநில சுயாட்சி கோரிக்கை எதிரொலிக்கிறது. அதற்கான வழிமுறைகளை வகுக்கும் வகையில் முதல்வர் தலைவர் தளபதி அவர்கள், தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். அதற்கு நாம் துணை நின்று வெற்றி பெறுவோம்.

மேலும் எம்.பி. அண்ணன் அவர்கள் நீதிமன்றங்களில், கழகத்தின் சார்பாக முக்கிய வழக்குகள் நடக்கும்போது, வழக்கறிஞர்களோடு அமர்ந்து யோசனைகளைக் கூறுவார். சில வழக்குகளின் விசாரணைக்கு உயர் நீதி மன்றத்திற்கு நேரிலும் வந்தார். நான் இளம் வழக்கறிஞராக இருந்தபோது ஒரு நாள் சித்தப்பா மோகன் தாஸ் அவர்கள் தொலைபேசியில் அழைத்து எம்.பி. அண்ணன் வரச்சொல்வதாகக் கூறினார். நான் சென்று சந்தித்தேன். முரசொலி சட்ட ஆலோசகராக என்னை நியமிப்பதாகக் கூறி அரிய வாய்ப்பினை தந்தார். அண்ணன் முரசொலி செல்வம் அவர்களிடம் யோசனைகளைப் பெற்றேன். முரசொலி கணக்காளர் மாணிக்கம் அவர்களின் உதவிகளோடு பொறுப்புடன் பணியாற்றினேன். அதன் பிறகு கழக சட்டத் துறையில் பணியாற்ற வாய்ப்புகளைப் பெற்று, கடமையாற்றி வருகிறேன்.

அண்ணன் எம்.பி. அவர்களின் பிறந்த நாளில் 'மாநில சுயாட்சி' நூலினை வாங்கி மீண்டும் படிப்போம். முதல்வர் கழகத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையில் இந்தியாவில் மாநில சுயாட்சி அடைவோம்!!

வணக்கம் வெ.ரவி
தி.மு.க. சொத்துப் பாதுகாப்பு
வழக்கறிஞர் பிரிவுத் தலைவர்

கனடா நாட்டில் காவல் மற்றும் தீயணைப்புத் துறைக்கான

சர்வதேச போட்டியில் பதக்கங்கள் வென்ற வீரர்களுக்கு பாராட்டு!

முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்!

சென்னை, ஆக. 17-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (16.8.2023) தலைமைச் செயலகத்தில், கனடா நாட்டின் வின்னிபெக்கு நகரில் நடைபெற்ற "காவல் மற்றும் தீயணைப்புத் துறையினருக்கான சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் 2023" போட்டியில் கலந்துகொண்டு பதக்கங்கள் வென்ற தமிழ்நாடு காவல்துறை வீரர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள்.

காவல் மற்றும் தீயணைப்புத் துறையினருக்கான சர்வதேச விளையாட்டுப் போட்டிகள், கனடா நாட்டின் வின்னிபெக்கு நகரில் 27.07.2023 முதல் 6.08.2023 வரை நடைபெற்றது. இப்போட்டிகளில், சுமார் 50 நாடுகளிலிருந்து 8,500க்கும் அதிகமான காவல் மற்றும் தீயணைப்புத் துறை வீரர்கள் கலந்து கொண்டனர்.

இதில், தமிழ்நாடு காவல் துறை தடகள அணியைச் சேர்ந்த காவல் கண்காணிப்பாளர் ஏ.மயில்வாகனன், காவல் ஆய்வாளர்கள் இராஜேஸ்வரி, எஸ்.சரவணப் பிரபு, கே. கலைச்செல்வன், ஆர். சாம் சுந்தர், என். விமல் குமார், காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்கள் வி. கிருஷ்ண மூர்த்தி, கே.பாலு, தலைமை காவலர்கள் பி.சந்துரு, எஸ்.சுரேஷ் குமார், சி.யுவராஜ், டி.தேவராஜன், மகளிர் தலைமை காவலர்கள் எம். லீலாஸ்ரீ, ஆர். பிரமிளா, டி. தமிழரசி ஆகிய 15 பேர் பல்வேறு போட்டிகளில் பொதுப்பிரிவில் பங்கேற்று, 15 தங்கம், 11 வெள்ளி மற்றும் 15 வெண்கலம், என மொத்தம் 41 பதக்கங்களை வென்றுள்ளனர். இதுவே தமிழ்நாடு காவல்துறை தடகள அணி ஓராண்டில் வென்ற அதிக பட்ச பதக்கங்களாகும். இவ்வீரர்கள், அரசின் அனுமதி பெற்று, தங்கள் சொந்த செலவில் இப்போட்டிகளில் பங்கேற்றுள்ளனர். பதக்கங்கள் வென்ற 15 காவல்துறையினர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சந்தித்து நேற்று வாழ்த்துப் பெற்றனர்.

"காவல் மற்றும் தீயணைப்புத் துறையினருக்கான சர்வதேச விளையாட்டுப் போட்டிகள்2023" போட்டியில், அகில இந்திய காவல்துறை விளையாட்டு கட்டுப்பாட்டு வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட இந்திய அணி சார்பில் கலந்து கொண்ட எஸ். சிவா, ஆர்.தினேஷ், வி. தினேஷ்,

ஜி.எஸ்.ஸ்ரீது ஆகிய 4 காவலர்கள் 5 தங்கம் மற்றும் 7 வெள்ளி, என

12 பதக்கங்களை வென்றுள்ளனர். பதக்கங்கள் வென்ற காவலர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சந்தித்து நேற்று வாழ்த்துப் பெற்றனர்.

இந்த நிகழ்வின்போது, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், காவல் துறை கூடுதல் இயக்குநர் (ஆயுதப்படை) எச். எம்.ஜெயராம் ஆகியோர் உடனிருந்தனர்.

மராட்டியத்தில் நிலநடுக்கம்!

மும்பை, ஆக. 17 -

மராட்டியத்தின் கோலாப்பூர் பகுதியில் நேற்று காலை 6.45 மணிக்கு மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. கோலாப்பூர் மாவட்ட நிலப்பரப்பில் இருந்து 5 கி.மீ. ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 3.4 ஆக பதிவாகியுள்ளதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தால் உயிர் சேதம் அல்லது பொருள் சேதம் குறித்த தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை.

கழக இலக்கிய அணிப் புரவலர் தஞ்சை கூத்தரசன் தொடங்கி வைக்க

மாம்பலம் ஆ.சந்திரசேகர் "கலைஞர் நூறு" எனும் தலைப்பில் சிறப்புரை!

இன்று சென்னை பெரியார் திடலில் நிகழ்ச்சி நடைபெறுகிறது!

சென்னை, ஆக. 17-

இதுகுறித்து பெரியார் நூலக வாசகர் வட்டத்தின் தலைவர் வழக்கறிஞர் திருமதி.ஆ.வீரமர்த்தினி தனது அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

உலகளாவிய வகையில் தலைசிறந்த பகுத்தறிவு ஞானி தஞ்சை பெரியாரின் அறிவுப் பாசறை திராவிடர் கழகத்தின் சேய் அமைப்பான பெரியார் நூலக வாசகர் வட்டத்தின் சார்பில் இன்று (17.8.2023 - வியாழக்கிழமை) மாலை 6.30 மணியளவில், சென்னை, தந்தை பெரியார் திடலிலுள்ள அன்னை திருமதி. ஈ.வெ.ரா. மணியம்மையார் அரங்கில் என் (ஆ.வீரமர்த்தினி) தலைமையில் நிகழ்ச்சி ஒன்று நடைபெறுகிறது.

தி.மு.க. தலைமை இலக்கிய அணிப் புரவலர். தஞ்சை கூத்தரசன் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்துப் பேசுகிறார். தென்மேற்கு மாவட்டத் தலைவர் மாம்பலம் ஆ.சந்திரசேகர் "கலைஞர் நூறு" எனும் தலைப்பில் சிறப்புரையாற்றுகிறார். பெரியார் நூலக வாசகர் வட்ட நிர்வாகிகள் ஆ.வெங்கடேசன், தென் மாறன், வழக்கறிஞர் மணியம்மை ஜெனார்த்தனம் மற்றும் ஆவடி பாஸ்கர், பேராசிரியர் தனராசு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எனவே இந்நிகழ்வுக்கு அனைவரும் அணி திரண்டு வரவேண்டுமென அன்புடன் வேண்டுகிறேன்.

இவ்வாறு அவர் தன் அறிக்கையில் கூறியுள்ளார்.

"55 ஆயிரம் அரசுப் பணியிடங்களை நிரப்புவோம்" எனும் முதல்வரின் அறிவிப்புக்கு நன்றி!

விவசாயக் கண்காட்சி - விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை சிறப்பாகக் கொண்டாடுவோம்!

தி.மு.க. விவசாய அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, ஆக 17-

தி.மு.க. விவசாய அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் நேற்று முன்தினம் (15.8.2023-செவ்வாய் கிழமை) மாலை 4.00 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் விவசாய அணி இணைச் செயலாளர் எஸ்.அப்துல்காதர் தலைமையில், செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் வரவேற்புரையாற்றிட, தி.மு.க. விவசாய அணி இணைச் செயலாளர்கள் நாகை ஆர். அருட்செல்வன், கள்ளிப்பட்டி மணி, பா.செந்தமிழ்ச் செல்வன், எல்.பி.தர்மலிங்கம், குறிஞ்சி என்.சிவகுமார் ஆகியோர் முன்னிலை யில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் துணைச் செயலாளர்கள் ஆர்.டி.ஏ.ஆதிசேஷன், கீழப்பாவூர் கு.செல்லப்பா, கிருஷ்ணகிரி டேம் டி.வெங்கடேசன், தஞ்சை ஜித்து (எ) ராஜரத்தினம், வி.என். மணி டி.எம்.அரியப்பன், தங்க சித்தார்த்தன், சூரப்பட்டி சுப்பிரமணி ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

கழகத் தலைவருக்குப் பாராட்டு!

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் "திராவிட மாடல்" ஆட்சியில், நித்தம் நித்தமொரு புத்தம் புதிய மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி வரும் நிலையில், சுதந்திர திருநாளை முன்னிட்டு நேற்று முன்தினம் (15.8.2023), சென்னை கோட்டைக் கொத்தளத்தில் இந்திய தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றுகையில்,

சென்னை போன்ற பெருநகரங்களில் தொடங்கி, பல்வேறு நகரங்களிலும் இன்று நாம் அடிக்கடி காணக்கூடிய காட்சி ஒன்று. ஓலா, ஊபர், ஸ்விகி, ஸொமட்டோ போன்ற நிறுவனங்களைச் சார்ந்த வாகனப் பணியாளர்களின் ஒட்டுமொத்த நலனைப் பாதுகாக்கும் வகையில், அவர்களுக்கென தனியே நல வாரியம் ஒன்று அமைக்கப்படும்;

ஆட்டோ ஓட்டுநர்களாகப் பணிபுரியும் பெண்கள் புதிதாக ஆட்டோ வாங்குவதற்கென ஒரு லட்சம் ரூபாய் மானியம் வழங்கும் திட்டத்தில் தற்பொழுது மேலும் 500 மகளிர் பயன்பெறும் வகையில் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும்;

மேலும், ஆட்டோ ஓட்டுநர்களாகப் பணிபுரியும் மூன்றாம் பாலினத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும்;

சென்னை கதீட்ரல் சாலையில் உள்ள செங்காந்தள் பூங்காவிற்கு அருகில் உள்ள 6.09 ஏக்கர் நிலத்தில் 25 கோடி ரூபாய் செலவில் "கலைஞர் நூற்றாண்டு பூங்கா" ஒன்று அமைக்கப்படும்;

திட்டங்கள் இல்லாத நாளே இல்லை எனச் சொல்லக்கூடிய வகையில், அரசு அறிவிக்கும் திட்டங்களை கடைக்கோடி மக்களிடமும் கொண்டு போய்ச் சேர்க்கின்ற பெரும் பொறுப்பை ஏற்றிருப்பவர்கள் அரசு ஊழியர்கள்.

ஆட்சி சக்கரம் சுழல்வதற்கு அவர்களே காரணமாக இருக்கிறார்கள். அந்தக் சக்கரம் வேகமாக சுழல்வதும், மெதுவாகச் சுழல்வதும் அரசு ஊழியர்களின் கைகளில்தான் உள்ளது.

அந்தக் கைகள் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும். அப்போதுதான் வேகம் அதிகமாகும் என்பதை எப்போதும் உணர்ந்த திராவிட மாடல் அரசு நடப்பாண்டுகளில் பல்வேறு துறைகளைச் சார்ந்த சுமார் 55 ஆயிரம் பணியிடங்களை நிரப்பும்.

- என ஏழையெளிய மக்களுக்கான - தொழிலாளர்களுக்கான நலத் திட்டங்களை அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கு தி.மு.க. விவசாய அணியின் இக்கூட்டம் தனது நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

விவசாயக் கண்காட்சி விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்!

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில், கழகத் தலைவர் அவர்கள், "தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா வினை" பட்டித் தொட்டி முதல் பட்டினக்கரை வரையென அனைத்து இடங்களிலும் எழுச்சியுடனும் சிறப்புடனும் கொண்டாடிட வேண்டுமென்றும், இந்நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தில், தி.மு.க.

விவசாய அணியையும் இணைத்து "விவசாய கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்" தமிழகம் முழுவதும் நடத்திட வேண்டுமென உத்தரவிட்ட கழகத் தலைவர் அவர்களுக்கு, தி.மு.க. விவசாய அணியின் இக்கூட்டம் தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

"விவசாய கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை" சிறப்பாக கொண்டாடிடுவோம். விவசாய அணியின் சார்பாக அனைத்து கழக ஒன்றியத்திலும் நவீன தொழில்நுட்பங்கள், விவசாய திட்டங்கள் மற்றும் கூட்டுறவு வங்கியின் பயிர்க் கடன்கள் குறித்த விழிப்புணர்வு முகாம் வேளாண்மை அதிகாரிகளை கொண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடத்த வேண்டும்.

விழிப்புணர்வு முகாம் குறித்த விளம்பரங்கள் ஒரு வாரத்திற்கு முன்னதாகவே ஒலிபெருக்கி அறிவிப்பு, செய்திதாள் விளம்பரங்கள் மற்றும் சுவரொட்டிகள் மூலமாக செய்யவேண்டும்.

முகாம்களில் பங்குபெறும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் மரக்கன்றுகள் மற்றும் விதைப்பந்து பைகளுடன் தலைவர் கலைஞர் அவர்கள் விவசாயிகளுக்கு செய்த பல தொலைநோக்கு திட்டங்கள் குறித்த துண்டு பிரசுரங்களை வழங்கிட வேண்டும்.

மாவட்டத்திற்கு ஒரு இடத்தில் என பல்வேறு விவசாய முறைகள், அதன் மகசூல் குறித்த மற்றும் தலைவர் கலைஞர் அவர்களின் விவசாயத்திற்காண முன்னோடி திட்டங்கள் பற்றிய விளக்கங்களின் தொகுப்புகள் அடங்கிய விவசாய கண்காட்சி நிகழ்ச்சி செப்டம்பர் மாதத்தில் நடத்த வேண்டும்.

கண்காட்சி நடைபெறும் இடம் மற்றும் நடைபெறும் நாட்கள் குறித்த பட்டியலை இறுதி செய்து தலைமை கழகத்திற்கு அனுப்ப வேண்டியுள்ளதால், ஆகஸ்ட் மாதம் இறுதி வாரத்திற்குள் கண்காட்சியின் விவரத்தை அணிச் செயலாளரிடம் தெரிவிக்க வேண்டும்.

அனைத்து உழவர் சந்தைகளிலும் தேவைப்படும் கூடுதல் வசதிகளை விவசாய அணியின் சார்பாக செய்துதரும் வகையில் முக்கிய கழக நிர்வாகிகளை கொண்டு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நடத்த வேண்டும்.

விவசாயிகளுக்காக 'நான் விவசாயி' என்ற செயலியை உருவாக்கி, அதில் விவசாய திட்டங்கள், காலநிலை குறித்த அறிவிப்புகள் மற்றும் சந்தைகளின் விலை நிலவரங்கள் குறித்த அறிவிப்புகள் ஆகியவை இடம் பெரும் வகையில் அமைக்கப்பட வேண்டும். இந்த செயலியானது முதலைமச்சர் மற்றும் விவசாய நலத்துறை அமைச்சர் ஆகியோர் மூலமாக துவக்கி வைக்கப்பட வேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள், "தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை" "விவசாய கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்" மூலம் தமிழகம் முழுவதும் கொண்டாடிட வேண்டுமென உத்தரவிட்டதற்கிணங்க, தத்தமது மாவட்டச் செயலாளர்களின் ஆலோசனை பெற்று, தலைமைக் கழகத்தால் மேலே குறிப்பிட்டபடி கலைஞர் நூற்றாண்டு நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டுமென தி.மு.க. விவசாய அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், கோயம்புத்தூர்
மொத்த விலை (இனவிலை முறை)
மின்னணு முறை ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.17/BCM/CBE/2023-24/நாள்.14.08.2023

தமிழக ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும் சிறப்பு தலைமைப் பொறியாளர், பொபது., கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், கோயம்புத்தூர் அவர்களால் (1) திருப்பூர் மாவட்டம், காங்கயம் மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையை தரம் உயர்த்த கூடுதல் படுக்கை வசதியுடன் கட்டப்படும் கூடுதல் கட்டடத்திற்கு மின் பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் (2) திருப்பூர் மாவட்டம் திருப்பூர் தொகுதி வெள்ளிரிவெளி அரசு மேல்நிலை பள்ளிக்கு 6 வகுப்பறைகள் கட்டும் பணி (இரண்டாம் அழைப்பு) ஆகிய பணிகளுக்கு இனவிலை முறை ஒப்பந்தப்புள்ளிகள் அரசு மின்னணு கொள்முதல் வலைதளத்தில் (e-procurement portal of Government of Tamilnadu) இணையவழி முறையில் 05.09.2023 பிற்பகல் 03.00 மணி வரை பதிவேற்றம் பெறப்பட்டு அன்றே பிற்பகல் 04.30 மணி முதல் திறக்கப்படும்.

இதர அனைத்து விவரங்களும் https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

செ.ம.தொ.இ/4548/ஒப்பந்தப்புள்ளி/2023

சிறப்பு தலைமைப் பொறியாளர், பொபது.,
கட்டட கட்டுமானம் & பராமரிப்பு வட்டம், கோயம்புத்தூர் - 641001

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

தம்பி ஏ. தேவேந்திரன்
ஆகஸ்ட் 17 (1995)



திராவிட இயக்க கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு தி.மு.கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகப் பணியாற்றியவர். தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும், தொடர்ந்து 38 ஆண்டுகளாக நகர்மன்ற உறுப்பினராகவும், மயிலாடுதுறை நகர்மன்றத் துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கல்லக்குடி, கருப்புக் கொடி, விலைவாசி உயர்வு எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் பங்கேற்று 17 முறை சிறை சென்றவர்.

"மதுரைக்கு முத்து, மாயூரத்திற்கு தம்பி தேவேந்திரன்" என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஜி. ஆனந்தன்
ஆகஸ்ட் 17 (2010)

நீதி கட்சித் தொடங்கி தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் பேச்சாற்றலாலும் இளமை பருவத்தில் தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டவர்.

35 ஆண்டுகாலம் தொடர்ந்து பி.என்.பாளையம் ஊராட்சிச் செயலாளராகவும், ஊராட்சி மன்ற உறுப்பினராகவும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இரயில் மறியல் போராட்டம், சட்டநகல் எரிப்பு போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம், மும்முனைப் போராட்டம் ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.